**ஹங்குரன்கெத பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹங்குரன்கெத பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹங்குரன்கெத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்க மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் பொழிப்பறிக்கையின் 1.2.1 ஆம் பந்தியின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 330,000 ஆன காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கீடு செய்யப் படாதிருந்ததுடன் களஞ்சியப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட 119 அலகுகளை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. மேலும் நிலையான சொத்தொன்று ரூபா 550,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் இறுதி கணக்கில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட 06 கணக்குகளுக்குரிய அட்டவணையில் காண்பிக்கப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 1,663,112 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாத வகையில் செயற்படுவதாக | வேறுபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப் பட்டிருந்த ரூபா 3,525,903 கூட்டுத்தொகையான 62 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா 356,341 ஆன ஆயர்வேத இருப்புகளுக்குரிய பதிவேடுகள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்காமை காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | பதிவேடுகளைப் பரீட்சித்து அளவுகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தேவையான ஆவணங்கள் பேணப்பட வேண்டும்.. |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | வீதவரிக்காக ஆதனங்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்ய வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாக மீளாய்வாண்டின் போதும் வீதவரி அறவீடு செய்திருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்காக வீதவரி அறவிடும் போது மேற்கொள்வதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,029,652 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 2,328,001 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,847,160 | 4,621,751 | 3,950,978 | 1,154,233 | 4,294,300 | 5,288,672 | 5,478,464 | 1,760,691 |
| (ii) | வாடகை | 7,433,000 | 4,545,010 | 4,356,413 | 2,549,918 | 6,132,600 | 2,135,839 | 2,218,859 | 2,400,253 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,480,000 | 3,124,423 | 3,124,423 | - | 866,200 | 2,327,862 | 2,327,862 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,573,500 | 9,333,583 | 3,011,499 | 8,367,334 | 81,723,134 | 17,970,936 | 21,212,496 | 4,607,719 |
| | | 20,333,660 | 21,624,767 | 14,443,313 | 12,071,485 | 93,016,234 | 27,723,309 | 31,237,681 | 8,768,663 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 111 வீத வளவுகளிலிருந்து ரூபா 395,330 ஆன நிலுவையொன்று காணப்பட்டதுடன் அம்மீதிகளில் 90 வீதவரி அலகுகளிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 326,773 ஆன மீதியொன்று காணப்பட்டது. | பணத்தை அறவிடுவதற்காக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| i | 2014 ஆம் ஆண்டு முதல் காணப்படும் பொது வியாபாரச் சந்தையிலுள்ள 12 கடைகளிலிருந்து ரூபா 2,214,532 ஆன நிலுவை கடை வாடகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. அத்துடன் ரிகில்லகஸ்கட உப அலுவலகத்திற்குரிய அதிகாரப் பிரதேசத்தில் 14 கடைகளின் நிலுவை வாடகை ரூபா 136,536 ஆக இருந்ததுடன் அது 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | வழக்கு தொடருவதற்குரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **ii.** | ரிகில்லகஸ்கட பொது வியாபார சந்தையிலுள்ள 6 கடைகள் மற்றும் ஹங்குரன்கெத மற்றும் ஹேவாஹட்ட நகரின் 20 கடைகளை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்காமல் மூடி வைக்கப்பட்டிருந்தது. | இக்கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | திருத்தம் செய்து சபை ஆதனங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**<br>மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிட மிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 492,584 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 7,874,750 ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நீதிமன்றத் தண்டப் பணத்தையும் முத்திரைக் கட்டணங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| **(ஈ)** | **ஏனைய வருமானம்**<br>1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 154((1) ஆம் பிரிவின் பிரகாரம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட காணிகளிலிருந்து விற்பனை பெறுமதி அடிப்படையில் ரூபா 79,570 ஆன வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | எஞ்சிய பணத்தை அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை- | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **உப உறுப்புரை**<br>2011 ஒக்தோபர் 06 ஆந் திகதிய 1726/15 ஆம் இலக்க வர்த்தமானியில் வாடகை வாகனங்களை நிறுத்திவைப்பது தொடர்பாக உப விதிகள் பிற்ப்பிக்கப்பட்டு 12 ஆண்டுகளைக் கடந்திருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இவ்வாக நிறுத்திவைத்தல் இடங்களை இனங்கண்டு கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்நிலைமையை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | உப உறுப்புரைகள் சட்ட ஒழுங்குகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1523/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2000 | எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுங்குபடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | இன் 53 ஆம் இலக்கம் மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினபல் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 04 ஆம் இலக்க சுற்றாடல் பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டிய 07 வியாபாரங் களிலிருந்து ரூபா 31,500 பெறுமதியான அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு தவிர்ப்பு செய்யப்பட்டு வந்தால் சட்ட நடவடிக்கை எடுப்பதாக | நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93 முதல் 95 வரையான பிரிவுகளின் பிரகாரம் கலி வண்டி சேவையொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை.. | மத்திய மாகாணண ஆளுனருக்கு கலி வண்டி ஒன்றை கோரி கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் 76 பொது மயானங்களின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டு இருக்கவில்லை. | சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் மயானங்களை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | ஆதனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள ஆயுர்வேத நிலையங்கள், சுடலைச் சாலைகள் நூலகங்கள் முன்பள்ளிகள், மலசல கூடங்கள் போன்ற 10 கட்டிடங்கள், ரிகல்லகஸ்கடயிலுள்ள 10 கடைகள் மற்றும் ரஹதுன்கொட சந்தை பூமியின் கட்டிடங்கள் முறையான பராமரிப்பு இன்றியும் திருத்தம் செய்யப்படாமலும் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டு இருந்ததுடன் சில கட்டிடங்கள் மற்றும் காணிகளுக்காக எல்லை வேலி இட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | 2024 அபிவிருத்தி நிதிஏற்பாடு அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் சபை நிதியத்தின் மூலம் மேலும் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ள கௌரவ ஆளுனருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டியதுடன் கட்டிடங்களை திருத்தம் செய்து பராமரித்து செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) | ரிகல்லகஸ்கட விளையாட்டு அரங்கில் 33'x21' அளவிலான விளையாட்டு அரங்கொன்றை நிர்மாணிப்பதற்கு கொங்கிரீட் தூண் இடப்பட்டு இரும்பு சட்டகமும் நிர்மாணிக்கப்பட்டு இருந்த போதும் அதன் கூரை நிர்மாணிக்கப்படாததன் காரணமாக பயன்பாட்டுக்கு எடுக்க முடியாததாக | இந்த நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்காக விளையட்டு கழகத்திடம் நிதி இல்லை என | சபை ஆதனங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

காணப்படுவதுடன் இரும்பு சட்டகம் சிதைவடையும் ஆபத்தொன்று காணப்பட்டது.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 16 பதவிகளில் 35 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் 01 பதவியில் 07 மிகைகளும் காணப்பட்டன. 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செயலாளர் பதவி, வேலை நிர்வாகி முன்பள்ளி ஆசிரியர் பதவி, சுடலைசாலை செயற்பாட்டாளர் மற்றும் பெக்கோ லோடர் செயற்பாட்டாளர் பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் இல்லாமை காரணமாக ஹங்குரன்கெத மற்றும் இடம்பிட்டிய ஆயுர்வேத நிலையங்கள் ஒருநாள் மாத்திரம் நோயாளர் சிகிச்சை சேவைக்காக திறந்து காணப்பட்டது. | தற்போது ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமை யால் தொடர்ந்தும் வெற்றிடங்கள் காணப்படுவதாகஇணை க்கப்பட்டிருக்கவில்லை என்பதாக | வெற்றிடங்களை பூர்த்தி செய்தல் வேண்டும். |